### சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில்

# மக்களை கவர்ந்த பொங்கல் கலை விழா

- ஆயிரக்கணக்கானோர் கண்டுகளிப்பு

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் நடத்தப்பட்ட ஒப்பனா நடனம், துள்ளிசை நடனம் மற்றும் தப்பாட்ட கலை நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை கவர்ந்தது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் ஆண்டுதோறும் பொங்கல் கலை விழா நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 9, 10, 11-ம் தேதிகளில் மாலை 5.45 முதல் இரவு 8.30 மணி வரையில் பொங்கல் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சைதாப்பேட்டை, சென்ட்ரல் மற்றும் திருமங்கலம் ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் நடத்தப்பட்ட இந்த கலை விழாக்களில் கேரள மாநிலம் பையனூரை சேர்ந்த சிகாபுதீன் குழுவினர் திருவாதிரைக் களி மற்றும் ஒப்பனா நடன கலை நிகழ்ச்சியும், கர்நாடக மாநிலம் சிமோகாவை சேர்ந்த பூதியப்பா குழுவினர் டோலு குனிதா துள்ளிசை நடனம், செல்வம் குழுவினர் தப்பாட்டம் நிகழ்ச்சியும் நடந்தன. இதைக் காண நுழைவு கட்டணம் எதுவும் வசூலிக்கப்படவில்லை. இதனால், ஆயிரக்கணக்கான மக்கள் இந்த கலை நிகழ்ச்சிகளை கண்டு ரசித்தனர்.

இதுதொடர்பாக பொதுமக்கள் சிலர் கூறும்போது, "சென்னை போன்ற பெரிய நகரங்களில் எப்போதும் செல்போன், கணினி என மூழ்கிக் கொண்டிருக்கும் இளைஞர்கள் மத்தியில், இது போன்ற கலை விழா பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. அனைத்து வயதினரும் திறந்த வெளியில் இதுபோன்ற கலை நிகழ்ச்சிகளை பார்ப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

சென்னையில் உள்ள மக்களுக்கு இதுபோன்ற கலை நிகழ்ச்சியை காண ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது" என்றனர்.